<u>O.S.No. 252/2013</u>

<u>DW 1: திருஞானம்</u> தேதி 08.4.2026

<u>பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தாவா சி அட்டவணை சொத்திற்கு ஒட்டி வடபுறமாக உள்ள இடம் கிழமேல் பாதை என்று சொன்னால் சரிதான். அந்த பாதை வாதியின் முன்னோர்கள் வீட்டு மனையாக பிரிவினை செய்த போது ஒதுக்கப்பட்ட பாதை என்று சொன்னால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்திற்கு கிழபுறம் உள்ள பகுதி முழுவதும் வாதிகளின் முன்னோர்களால் வீட்டுமனைகளாக பிரிவினை செய்யப்பட்ட சொத்துகள் என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்திற்கு தென்புறம் உள்ள இடம் வாதிகளின் உறவினர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான் நடுவில் பொது வாய்க்கால் போகிறது. அவ்வாறு உறவினர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பெட்ரோல் பங்க் இருந்ததா என்றால் சரிதான். அது தொடர்பாக ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த பெட்ரோல் பங்கை என் தாத்தா என்.பி.ஏ.சண்முகம்பிள்ளை கூட்டு பங்குதாரர் நிறுவனத்தில் பங்குதாரராக இருந்தார். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி இடம் மேற்படி நிறுவனத்திடம் இருந்து சுவாதீனம் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்தில் 1972 ம் ஆண்டு எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை மற்றும் அதற்கு பின்னிட்டு ஏற்பட்ட கிரையம் ஆகியவற்றிட்டு பின்னிட்டு வேறு ஆவணம் எதுவும் எங்கள் குடும்பத்தில் ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்து தற்போது காலியிடமாக உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள சொத்து வரி வார்டு 18 க்கு சேர்ந்தது என்றால் சரிதான். பிவாசாஆ 6ல் கதவு எண்.158 என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிவாசாஆ 6 தாவா சி அட்டவணை சொத்திற்கு சம்மந்தப்படாதது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ 7 ஆவணமும்

என்னுடைய உரிமையை ஊர்ஜிதம் செய்யும் ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ 9 ல் என் முன்னோர்கள் பெயர் இல்லை என்றால் சரிதான். பிவாசாஆ 11 மற்றும் பிவாசாஆ 15 ல் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கீழ் தகவல்கள் நான் கோரியதில் உரிய கட்டணம் செலுத்தி தகவல் பெற்று ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல மீண்டும் விண்ணப்பம் செய்து கட்டணம் செலுத்தி தகவல் பெற்றேன். அந்த தகவல் எனக்கு விரோதமாக வந்ததால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் விட்டு விட்டேன் என்றால் சரியல்ல. என் தாத்தா சண்முகம்பிள்ளைக்கு என் அப்பா தவிர இதர வாரிசுகளும் உள்ளார்கள். சண்முகம்பிள்ளையின் மற்ற வாரிசுகளுக்கும் என் தந்தைக்கும் இடையே சொத்துகளை பொறுத்து பிரிவினை ஏதேனும் ஏற்பட்டதா என்றால் 1981 ல் ஏற்பட்டது. தாவா சி அட்டவணை சொத்து 1981 பாகப்பிரிவினையின் உட்படுத்தப்படவில்லை. தாவா சி அட்டவணை சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்பதால் தான் 1981 பாகப்பிரிவினையில் அதை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் முன்னோர் வீட்டு மனைகளாக பிரிவினை செய்து விற்ற பிறகு நிறுத்தி வைத்த சொத்து தான் தாவா சி அட்டவணை சொத்து என்றால் சரிதான். தாவா சி அட்டவணை சொத்தில் எனக்கு எந்த வித உரிமையும் கிடையாது என்றும் பிவாசாஆ 1 மற்றும் பிவாசாஆ 2 ஆவணங்களை நானே ஏற்படுத்தி கொண்டு வருவாய் துறையிலும் பெயர் மாற்றம் செய்து கொண்டு தாவா சி அட்டவணை சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்தை பொறுத்த வரை வாதிகளின் குடும்பத்திற்குள் ஒரு பாகப்பிரிவினை மற்றும் கிரையம் நடந்ததாக பிவாசாஆ 4 மற்றும் பிவாசாஆ 5 தாக்கல் செய்திருக்கிறேன். பிவாசாஆ 4 மற்றும் பிவாசாஆ 5 ஆவணங்கள் ஏற்பட்டு 25 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். பிவாசாஆ 4 மற்றும் பிவாசாஆ 5 ஆவணங்களின் பெயரில் ரத்து செய்ய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய கூடாது என்று தாசில்தாரிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன் நீதிமன்ற

நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இன்றைய தேதியில் சுவாதீனம் என் வசம் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. தாவா சி அட்டவணை சொத்தை பொறுத்து நான் 3ம் நபர் என்றும் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.